

திருச்சி மாநகரில் டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயரில் அமையவுள்ள மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மைய வளாகத்தில் அவரது பிறந்தநாளை முன்னிட்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவச் செல்வங்கள், போட்டித் தேர்வுக்கு தயாராகும் இளையோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மாவட்ட மைய நூலக வாசகர் வட்டத்தினர் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். இந்த அறிவுச்சுரங்கத்தை உருவாக்குவதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டுள்ள ஈடுபாடு குறித்தும், என்னென்ன வகையான நூல் பிரிவுகள், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய அரங்குகள், குழந்தைகளுக்கான பிரத்யேக பிரிவு உள்ளிட்ட கட்டமைப்புகளுடன் நூலகம் அமையவுள்ளது என்பதையும் குழந்தைகளுக்கு டிஜிட்டல் துறையின் மூலம் திரையிட்டு காண்பிக்கப்பட்டது இந்நிகழ்வில் கலந்து கொண்ட பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்.இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் மு. மதிவாணன், வாசகர் வட்ட தலைவர் அல்லிராணி மற்றும் அரசு அதிகாரிகள் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தினை 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் கலந்து கொண்டு பார்வையிட்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) சு.சரவணன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் எஸ்.கார்த்திக், மூலனூர் ஒன்றிய கழக செயலாளர்கள் ப.பழனிச்சாமி, துரை தமிழரசு, பேரூர் கழக செயலாளர்கள் மூலனூர் பேரூராட்சி தலைவர் மக்கள் தெண்டபாணி, கன்னிவாடி சுரேஷ், கன்னிவாடி பேரூராட்சி தலைவர் ரேவதி சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருச்சி மாநகரம் பஞ்சப்பூரில் கட்டப்பட்ட

# முத்தமிழறிஞர் கலைஞர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம்!

## மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!

திருச்சி, ஜூலை 17-

திருச்சி முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மக்கள் பயன்பாட்டிற்கு வந்தது பேருந்து சேவையை அமைச்சர் கே. என்.நேரு கொடியசைத்து தொடக்கி வைத்தார்

திருச்சி மாநகரம் பஞ்சப்பூரில் கட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி பேருந்து முனையத்தை கடந்த மே மாதம் 9 ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிலையில் அந்த பேருந்து முனையம் இன்று முதல் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு பேருந்து முனையத்தி லிருந்து பேருந்து சேவைகளை கொடியசைத்து தொடக்கி வைத்தார். தொடர்ந்து பேருந்தில் பயணித்த பயணிகளிடம் கலந்துரையாடினார். இந்த நிகழ்வில் திருச்சி மாவட்ட ஆட்சியர் சரவணன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையத் மதுபாலன், திருச்சி காவல் ஆணையர் காமினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சென்னை, திருப்பதி, வேலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், புதுச்சேரி மார்க்கங்களிலிருந்து திருச்சி நோக்கி உள்வரும் அனைத்து பேருந்துகளும் நெம்பர் 1 டோல்கேட், பழைய பால் பண்ணை, தேசிய நெடுஞ்சாலை வழியாக பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு செல்ல வேண்டும். மீண்டும் பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை வழியாக திரும்பச் செல்ல வேண்டும்.

தஞ்சாவூர், கும்பகோணம், வேளாங்கண்ணி, காரைக்கால் மார்க்கத்திலிருந்து திருச்சி நோக்கி உள்வரும் அனைத்து பேருந்துகளும் துவாக்குடி, திருவெறும்பூர், பழைய பால் பண்ணை, டிவிஎஸ் டோல் கேட் மன்னார்புரம் ரவுண்டானா வழியாக பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு செல்லவேண்டும். பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து முனையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை, டிவிஎஸ் டோல் கேட், பழைய பால் பண்ணை வழியாக திரும்பச் செல்ல வேண்டும்.

நாமக்கல், சேலம், பெங்களூரு மார்க்கங்களிலிருந்து

திருச்சி நோக்கி உள்வரும் அனைத்து பேருந்துகளும் நெம்பர் 1 டோல் கேட், பழைய பால் பண்ணை, டி.வி.எஸ். டோல்கேட், மன்னார்புரம் ரவுண்டானா வழியாக பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு செல்ல வேண்டும். பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை, டிவிஎஸ் டோல்கேட் நெ.1 டோல் கேட் வழியாக திரும்பச் செல்லவேண்டும்.

புதுக்கோட்டை, அறந்தாங்கி, ராமேஸ்வரம் மார்க்கங்களிலிருந்து திருச்சி நோக்கி உள்வரும் அனைத்து பேருந்துகளும் விமான நிலையம், டிவிஎஸ் டோல்கேட், மன்னார்புரம் ரவுண்டானா வழியாக பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் வரை செல்ல வேண்டும். பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து இதே வழித்தடத்தில் திரும்பச் செல்ல வேண்டும்.

### கரூர், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர் மார்க்கம்

மேற்கண்ட வழித்தடங்களில் திருச்சி நோக்கி உள்வரும் அனைத்து பேருந்துகளும் சத்திரம் பேருந்து நிலையம், கரூர் புற வழிச் சாலை, சாஸ்திரி சாலை, மாவட்ட நீதிமன்றம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வ.உ.சிசாலை, மத்திய பேருந்து நிலையம், மன்னார்புரம் ரவுண்டானா வழியாக பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் வரை செல்ல வேண்டும், பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து இதே வழித்தடத்தில் திரும்பச் செல்லவேண்டும்.

மணப்பாறை, திண்டுக்கல், பழனி, குமுளி மார்க்கத்திலிருந்து திருச்சி நோக்கி உள்வரும் பேருந்துகளும் கருமண்டபம், மன்னார்புரம் ரவுண்டானா வழியாக பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு செல்ல வேண்டும். இவை பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து இதே வழிதடத்தில் திரும்பச் செல்ல வேண்டும்.

மதுரை, தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மார்க்கத்திலிருந்து திருச்சி நோக்கி உள்வரும் அனைத்து பேருந்துகளும் தேசிய நெடுஞ்சாலை வழியாக பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையம் வரை செல்ல வேண்டும். இவை பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து இதே வழிதடத்தில் திரும்பச் செல்ல வேண்டும்.

மத்திய பேருந்து நிலையத்தை முனையமாகக் கொண்டு இயங்கும் அனைத்து நகரப் பேருந்துகளும் மத்திய பேருந்து நிலையம், மன்னார்புரம் வழியாக பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு செல்ல வேண்டும். இவை பஞ்சப்பூர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திலிருந்து இதே வழிதடத்தில் திரும்பச் செல்லவேண்டும்.

### ஆம்னி பேருந்துகள்

மத்திய பேருந்து நிலையத்தின் சுற்றுப்பகுதிகளில் ஒப்பந்த ஊர்தி ஆம்னி பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றக்கூடாது. இவை முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்கு அருகில் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலி இடத்தில் பயணிகளை ஏற்றி, இறக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பயணிகளுக்கான வசதிகள்!

திருச்சி பஞ்சப்பூர் பேருந்து முனையத்திற்கு வந்து செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தேவையான உணவு, சிற்றுண்டி, தேநீர், காபி மற்றும் குளிர்பானங்கள் போன்ற உணவு பொருட்கள் விற்பனைக்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இப்பேருந்து முனையத்தில் எண்ணிக்கையில் 10 கடைகளும், 12 எண்ணிக்கையில் உணவகங்களும், எண்ணிக்கையில் சிற்றுண்டி கடைகளும் செயல்படவுள்ளது.

மேலும் பஞ்சப்பூர் பேருந்து முனையத்தை ஒவ்வொரு மணி நேரமும் சுத்தம் செய்து தூய்மையாக பராமரிக்க 228 பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தொடர்ந்து தூய்மை செய்யும் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பயணிகள் மற்றும் அவர்தம் உடைமைகளின் பாதுகாப்பிற்கு காவல் துறையினர் 52 பேர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

பயணிகளின் தேவைக்கேற்ப ஆட்டோ, டாக்ஸி மற்றும் இடாக்ஸி சேவைகள் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பயணிகளுக்கு உதவி செய்ய தன்னார்வலர்கள் 30 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பேருந்து முனையத்திற்குள் நடந்து செல்ல சிரமப்படும் முதியவர்கள், நோயாளிகள் பயன்பாட்டிற்காக 3 எண்ணிக்கையிலான பேட்டரி வாகனங்கள் தயார் நிலையில் உள்ளது.

பயணிகளின் அவசரத் தேவைக்காக அழைப்பின் பேரில் (On call) மருத்துவர் குழு (Health Desk) தயார் நிலையில் உள்ளது.

இங்கு 1257 நகர பேருந்துகளும், 1929 வெளியூர் பேருந்துகளும் இயக்கப்பட உள்ளது. ஒரே நேரத்தில் 401 பேருந்துகள் நிறுத்தும் வகையில் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. இரண்டு அடுக்குகளை கொண்ட பேருந்து முனையத்தில் தரைத்தளத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகளும், முதல் தளத்திலிருந்து

நகர பேருந்துகளும் இயக்கப்படுகிறது. தரை தளம் முழுவதும் ஏ.சி வசதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே முதன் முதலாக ஏசி வசதி செய்யப்பட்ட பேருந்து நிலையம் என்கிற பெருமையை இந்த பேருந்து நிலையம் பெற்றுள்ளது.

பேருந்து முனையத்தில் டிஜிட்டல் வழிக்காட்டு பலகைகள், 50 எல்.இ.டி திரைகள், நகரும் படிகட்டுகள், லிஃப்கள், ஆண்கள், பெண்கள், திருநங்கைகளுக்கு 173 கழிப்பறைகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள், உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்டர் கிரவுண்டில் 1544 இருசக்கர வாகனங்கள் நிறுத்த இட வசதி, தரை தளத்தில் 216 கார், 391 இரு சக்கர வாகனங்கள் நிறுத்த வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேருந்து சேவைகளை தொடக்கி வைத்த பின்பு செய்தியாளர்களிடம் பேசிய நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு,

மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் பேருந்து நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்வதற்கு கூடுதல் கட்டணம் எதுவும் வசூலிக்க படாது. சத்திரம் பேருந்து நிலையம் மற்றும் மத்திய பேருந்து நிலையம் இரண்டும் பயன்பாட்டில் தான் இருக்கும். நகரப் பேருந்துகள் அங்கிருந்து இயக்கப்படும் மேலும் கரூர் அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்களில் செல்லும் பேருந்துகள் சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும்.

நகரப் பேருந்துகள் அனைத்தும் மத்திய பேருந்து நிலையம் வந்து பஞ்சப்பூர் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் வகையிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்றார்.

பஞ்சப்பூர் பேருந்து நிலையம் மிகவும் அழகாகவும் சுத்தமாகவும் இருப்பதாகவும் இதனால் திருச்சி மாவட்டத்தின் போக்குவரத்து நெரிசல் குறையும் எனவும் பொதுமக்கள் கருத்து தெரிவித்தனர்.



முதலமைச்சர் அவர்கள், “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை, நேற்று முன்தினம் (15.07.2025) கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி, ஆலந்துறை பேரூராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் பேரூராட்சி தலைவர் மணிமேகலை ராமமூர்த்தி, வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தொடங்கி வைத்துப் பார்வையிட்டு மக்கள் வழங்கிய மனுக்களுக்கு தீர்வுகளை வழங்கினர். இதில் அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் அவர்கள், “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை, நேற்று முன்தினம் (15.07.2025) கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கோவை மாநகராட்சி, மருதமலை சாலை, வடவள்ளி, ஸ்ரீ காமாட்சி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் தொடங்கி வைத்துப் பார்வையிட்டு, குழந்தை பிறப்பு சான்றிதழ் வேண்டி மனு அளித்த பயனாளிக்கு உடனடியாக பதிவு செய்து சான்றிதழ்களை வழங்கினார். இதில் மாநகர் மாவட்டச் செயலாளர் சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.கணபதி ப.ராஜ்குமார், மாநகர காவல் ஆணையாளர் சரவணசுந்தர், மாநகராட்சி மேயர் க.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், துணை ஆணையாளர் அ.சுல்தானா, தலைமைப் பொறியாளர் விஜயகுமார், மண்டல தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் (கிழக்கு), கே.ஏ.தெய்வயானை தமிழ்மறை (மேற்கு), தனலட்சுமி (தெற்கு), உதவி நகர்நல அலுவலர் மரு.பூபதி, நகரமைப்பு அலுவலர் குமார், உதவி ஆணையர் துரை முருகன், மாமன்ற உறுப்பினர்கள் லட்சுமி பாலகிருஷ்ணன், செந்தில் குமார், உதவி செயற்பொறியாளர் சவிதா உள்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் மேற்கு ஒன்றியம் தாந்தோணி, துங்காவி மற்றும் மெட்ராத்தி ஆகிய பகுதிகளில் ரூ.2 கோடியே 13 இலட்சத்து 89 ஆயிரம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன் முன்னிலையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.